பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 08 செவ்வாய்க்கிழமை 21.01.2025 கதிர் 074

## இனி இது ரகசியம் அல்ல!

ஆறு கடக்கும் வரைக்கும்தான் அண்ணன், தம்பி அதன் பின்னர் நீயாரோ நான் யாரோ என்பது போன்றுதான் ஆளும்தரப்புக்கும் ஊடகங்களுக்கு இடையிலான ☞ 2

# தமது பொய்களுக்கு நீண்ட ஆயுள் இல்லை என்பதை ஆளும்தரப்பு உணர்ந்துவிட்டது

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

தமது பொய்களுக்கு நீண்ட ஆயுள் இல்லைஎன்பதைஜனாதிபதிஅநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்புஉணர்ந்துகொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்சமிந்தவிஜேசிறிதெரிவித்தார்.

அவர் கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தாம் ஏற்கனவே கூறிய பொய் களால் மக்கள் அதிருப்தியடைந் துள்ளனர்என்பதைஉணர்ந்து கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அடுத்து தேர்தலை நடத்துவதுவதா இல்லையா என்பதைமதிப்பாய்வுசெய்வதற்காக மக்கள் சந்திப்புக்களை நடத்த ஆரம்பித்துள்ளார்.



பொய்களுக்கு நீண்ட நாட்கள் தொடர்ந்தும் பயணிக்க முடியாது என்பதை இந்த ஆளும்தரப்பு உணர்ந்து கொண்டுள்ளது.

அரசியல்மேடைகளில்முன்னாள் ஆட்சியாளர்களை விமர்சித்துக் கொண்டிருப்பதற்கு நீங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர் இல்லை என்பதை ஜனாதிபதி அநுரவுக்கு நினைவுபடுத்துகின்றேன். ஊழல், மோசடியாளர்கள் சட்டத்தின் முன் ☞ 8

## மண் சரிவு எச்சரிக்கை

பல மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தஎச்சரிக்கைஅறிவிப்புநேற்றுமாலை 4 மணி முதல் இன்று மாலை 4 மணி வரை நடைமுறையில் இருக்கும் ☞ 8

## ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைய ஐதே கட்சி செயற்குழு முழு அனுமதி

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பான கலந்துரையாடல்களை ஆரம்பிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு முழு அனுமதியை வழங்கியுள்ளது. கலந்துரையாடல்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் ராஜித்த சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூட்டம் கட்சியின் தலைவரும்முன்னாள்ஜனாதிபதியுமானரணில்விக்ரமசிங்க தலைமையில் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று மாலை இடம்பெற்றது. கூட்டம் முடிந்த பின்னர் அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் ☞ 8

## நான் தயாரித்த ஆடையை அணிகிறார் ஜனாதிபதி அநுர

### வருந்தும் உதய கம்மன்பில

2020இன் பின்னர் தான் தயாரித்த ஆடையை தற்போது ஜனாதிபதி அநுர அணிந்துசெல்வதாக பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.



பிவிதுரு ஹெல உருமய கட்சி அலுவலகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

மிகக் குறுகிய காலத்தில் மின் கட்டணத்தை ☞ 2

# மக்கள் ஆபத்தில் உள்ளனர்

### முன்னிலை சோசலிசக் கட்சி எச்சரிக்கை

இந்தியாமற்றும்சீனாஆகியஇரண்டு பிராந்திய சக்திகளும் கொழும்பில் ஒரு வலுவான தலையீட்டிற்கு தயாராகி வருகின்றன என்று முன்னிலை சோசலிசக் கட்சி எச்சரித்துள்ளது. பிராந்திய வல்லாதிக்கப் போட்டியால் ஏற்படும் ஆபத்தை இது மேலும் தீவிரமாக்கும் என்றும் தெரிவித்துள்ள அது, மக்கள் ஆபத்தில் உள்ளனர் எனவும் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 2025ஜனவரி14முதல்17ஆம்திகதிவரை சீன மக்கள் குடியரசிற்கு அரச-முறைப் பயணத்தைமேற்கொண்டதுடன்,ஜனவரி 16 கூட்டறிக்கையும் வெளியிடப்பட்டது. கூட்டறிக்கையில், 'ஒரே தடம்; ஒரே சாலை' ஒத்துழைப்பை ஆதரிப்பதற்காக அதிபர் ஜி ஜின்பிங் அறிவித்த எட்டு முக்கிய நடவடிக்கைகளை பின்பற்ற இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது.

''இரு தரப்பும் ஒரே தடம்; ஒரே சாலை ஒத்துழைப்பு திட்டத்தில் கையெழுத்திட்டன'' என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

''கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை ☞ 2

## சீரற்ற காலநிலையினால் 17 ஆயிரம் போர் பாதிப்பு

### ஒருவர் உயிரிழப்பு

வடகிழக்கு பருவ மழையால் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக 5 மாவட்டங்களில் 5000க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 17,000க்கும் மேற்பட்ட நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, ஒருவர் உயிரிழந்துள்ளார். வடக்கு, வட - மத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் இன்றும் சீரற்ற காலநிலை தொடரக்கூடும் என இலங்கை வளிமண்டலவியல்திணைக்களம்எதிர்வுகூறியுள்ளது.

நேற்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் அம்பாறை, திருகோணமலை, பொலன்னறுவை, மட்டக்களப்பு மற்றும் பதுளை மாவட்டங்களிலேயேஅதிகபாதிப்புக்கள்பதிவாகியுள்ளன. அதற்கமைய அம்பாறை மாவட்டத்தில் கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக 4774 குடும்பங்களைச் சேர்ந்த 13 872 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ☞ 8

## யாழ். கலாசார நிலையத்தில் தமிழ் மொழிக்கு 3ஆம் இடம்

### பார்த்து அதிர்ந்து போனேன் என்கிறார் அமைச்சர் சந்திரசேகரன்

யாழில் திருவள்ளுவர் கலாசார மத்தியநிலையத்தின்பெயர்ப்பலகையில் தமிழ்மொழிக்கு மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டிருந்ததை பார்த்து தான் அதிர்ச்சியுற்றேன் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.



நேற்று (திங்கட்கிழமை) யாழ்ப்பாணம் - பலாலி வீதி, ☞ 8

## முன்னாள் அமைச்சர் மனுஷ இன்று சிஐடியில் வாக்குமூலம்

தென் கொரிய வேலை வாய்ப்பு சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர்மனுஷநாணயக்கார இன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் வாக்குமூலம் அளிக்க உள்ளதாக அவரதுசட்டத்தரணிகொழும்புநீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.



குறித்த சம்பவம் தொடர்பாக தாம் கைது செய்யப்படுவதற்கு ☞ 8

## மகிந்தவின் வீட்டைக் கேட்பது ஜனாதிபதியின் பழிவாங்கல்

### இப்படிக் குற்றஞ்சாட்டுகிறார் நாமல்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சதான் இருக்கும் இல்லத்திற்கு மாதாந்தம் 4.6 மில்லியன் ரூபாய் வாடகை செலுத்தவேண்டும் அல்லது அதிலிருந்து ☞ 8

## அடைக்கலநாதன் எம்.பியை உடன் கைதுசெய்ய உத்தரவு

### அ'புரம் நீதிமன்றம் பிறப்பித்தது

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி லக்மாலி ஹேவாவசம் உத்தரவிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உள்நாட்டு போர் நடைபெற்றபோது இலங்கை பற்றிய தகவல்களை அதிகாரபூர்வமற்ற இந்திய ஊடகம் ஒன்றிற்கு சட்டவிரோதமாக ☞ 8

## மகிந்தவை அவர் வீட்டிலிருந்து வெறியேற்றுவதற்குச் சதியாம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை அவரது இல்லத்தில் இருந்து வெளியேற்ற ஆளும்தரப்பு சதி செய்து வருவதாக பொதுஜன பெரமுனவின்முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவரது குடியிருப்புக்கு மாதாந்தம் 4.6 மில்லியன் ரூபாய் வாடகை செலுத்தவேண்டும் அல்லது அதைவிட்டு வெளியேறவேண்டும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே அவர் இன்று மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# நெல் விலையை தீர்மானிக்கும் பொறுப்பு 5 நிறுவனங்களிடம்

நெல்லுக்கான குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு 5 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஹெக்டர்கொப்பேகடுவவிவசாயஆராய்ச்சி நிறுவனம், விவசாய அமைச்சு, விவசாய திணைக்களம், உணவுத் திணைக்களம் உள்ளிட்ட 5 நிறுவனங்களுக்கு இந்தப் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளதாக விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

குறித்த நிறுவனங்களின் ஊடாக உற்பத்தி செலவினங்களை கணக்கீடு செய்து நெல்லுக்கான குறைந்தபட்ச விலையை அறிவிக்கவுள்ளதாக அவர் கூறினார்.

உற்பத்தி செலவுகளைக் கணக்கிடும் போது உர நிவாரணத்தை கருத்திற்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக விவசாய பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன குறிப்பிட்டார்.

விரைவில் நெல்லுக்கான குறைந்தபட்ச விலை அறிவிக்கப்படுமென அவர் கூறினார்.

நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளுக்கு நெல்லைக் கொண்டு சென்று விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு ஒரு கிலோகிராமுக்கு 2 ரூபா மேலதிக கொடுப்பனவை வழங்க அரசாங்கம் அண்மையில் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

# தொடருந்து டிக்கெட் விற்பனை மோசடி பற்றி சிஐடி விசாரணை

தொடருந்து திணைக்களத்தால் ஒன்லைனில் வழங்கப்பட்ட டிக்கெட்டுகளை அதிக விலைக்கு விற்பனை செய்த சம்பவம் குறித்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

தொடருந்து திணைக்களம் அளித்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

மொபிடெல் நிறுவனத்துடன் இணைந்து ஒன்லைனில் டிக்கெட்டுகளை விற்பனை செய்யும் திட்டத்தை தொடருந்து திணைக்களம் செயல்படுத்தி வருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிக்கையிட்டுள்ளது. குறுகிய நேரத்தில் ஒன்லைனில் டிக்கெட்டுகளைப் பெற்று அவை அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், அது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின்கணினி குற்ற விசாரணை பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்தது.

இந்த சம்பவம் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு, நீதிமன்றத்திற்கு அறிக்கை யிடப்படும் எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## இனி இது .....

உறவு இருக்கும் போலுள்ளது. எதிர்க்கட்சியாக இருக்கும்வரையில் பத்திரிகையாளர்களுடன் கொஞ்சிக்குலாவிய ஜேவிபிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இப்போது பத்திரிகையாளர்களையும் ஊடகங்களையும் கண்டாலே ஆகவில்லை. ஊடகவியலாளர்கள் பலரும் அரசியல் நோக்கத்தோடு செயற்படுகின்றார்கள், அவர்களைத் திருத்தவேண்டும், நல்வழிப்படுத்தவேண்டும் என்றெல்லாம் பிதற்றுகிறார்கள். அழகிய இலங்கை வளமான வாழ்க்கை நோக்கிய தமது பயணத்திற்கு ஊடகர்கள் தடையாக நிற்கிறார்கள் என்றெல்லாம் குறைப்படுகின்றார்.

எதிர்க்கட்சியில் இருந்தபோது இதேபோன்று ஊடகர்கள் சகட்டுமேனிக்கு எழுதியவற்றை எல்லாம் அவர்கள் சகித்துக்கொண்டார்கள். அல்லது ஊக்கப்படுத்தினார்கள். அப்போதைய ஆளும்தரப்பை சகட்டுமேனிக்கு விமர்சித்த ஊடகவியலாளர்களை போற்றிப்புகழ்ந்தார்கள். ஆனால் ஆட்சியைப்பிடித்தபின்னர் அவர்களின் சகிப்புத் தன்மை காணாமல்போய்விட்டது. விமர்சனங்களைக் கண்டு பதறுகிறார்கள். இவையெல்லாம் தவறு என்று கதறுகிறார்கள். தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்னுமாம் என்பதைப் போல் துள்ளிக் குதிக்கிறார்கள்.

இதன்நீட்சியாக இப்போது ஊடகத்துறையின் செல்நெறியை ஒழுங்குபடுத்தும் விதத்தில் பத்திரகையாளர் பட்டய நிறுவனம் ஒன்றை உருவாக்குவது பற்றியும் சிந்திக்கிறார்கள். இதுவொன்றும் இந்த ஆளும் தரப்பின் புதிய திட்டமல்ல. இதற்கும் முன்னரும் விமர்சனங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஆளும்தரப்புக்கள் எல்லாம் அவ்வப்போது தமது கையிலெடுத்த விடயம்தான். ஆனால் சாத்தியமாகியதில்லை. இப்போது அந்தத் திட்டத்தைக் கையிலெடுக்க தேசியமக்கள்சக்தியும் முனைந்துநிற்கின்றது.

கணக்காளர்களுக்கான தொழில் நேர்த்தியை, தரத்தை உறுதிப்படுத்தும் விதத்தில் பட்டயக் கணக்காளர்கள் என்ற தரநிர்ணயச் சான்றிதழ்கள் வழங்கப்படுவது போன்று பத்திரிகையாளர்களுக்கும் ஒரு தரநிர்ணயச்சான்றிதழ்வழங்குவதற்கானதிட்ட முன்மொழிவே இது. இப்படித் தரநிர்ணயம் செய்வதன் மூ-லம் பத்திரிகையாளர்களைத் தரமானவர்கள், தரமற்றவர்கள் என்று வகைப்படுத்தி தம்மை விமர்சிப்பவர்களைத் தரமற்ற பத்திரிகையாளர்கள் என்று ஒதுக்கிவிடமுடியும் என்று ஆளும்தரப்பினர் எண்ணுவது சிறுபிள்ளைத்தனமானது. அதுவும் சமூக ஊடகங்களும் மலிந்துவிட்ட இந்தக் காலத்தில் இந்த முயற்சி ஆளும்தரப்பு எதிர்பார்க்கும் பயனைத் தரக்கூடியது அல்ல.

நாட்டிலுள்ள ஊடகவியலாளர்களுக்கு ஊடகத்துறை தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்கும், தொழில்தகைமையை அதிகரிப்பதற்கும் வாய்ப்பளிக்கும் வகையில் 'பட்டய ஊடக நிறுவனம்' ஒன்றை (உஜூழிஷ-மிளஷள-துள-ஷ்ழிஷ்ஜவிமிஷ்மிற்மிஷ்லிஜ) நிறுவுவதற்கான திட்டத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருவதாக வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கிறார்.

இலங்கை பத்திரிகை பேரவையின் அதிகாரிகள் மற்றும் உறுப்பினர்களின் பங்கேற்புடன் நாரஹேன்பிட்டியிலுள்ள வெகுஜன ஊடகத்துறை அமைச்சில், நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலே அமைச்சர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

முன்னைய பல ஆளும்தரப்பினரும் இதுபோன்ற ஒரு நிறுவனத்தை நிறுவ முயற்சித்தனர், ஆனால் அது கைகூடவில்லை என்று அமைச்சருக்கு கலந்துரையாடலில் தெளிவுபடுத்தப்பட்டது. இதற்கான பல முயற்சிகள் வெற்றிபெறவில்லை என்பதை அங்கிருந்தவர்கள் சுட்டிக்காட்டினர்.

இருந்தாலும் எதிர்வரும் காலங்களில் எப்படியாவது இந்த நிறுவனத்தை நிறுவுவது தனது எதிர்பார்ப்பு என்பதை அமைச்சர் அங்கு வெளிப்படுத்தினார். இதன் மூலம், இந்த நாட்டில் ஊடகத்துறை தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் தொழிலுக்கு மதிப்பளிக்க முடியுமென்றும் அவர் அதற்குக் காரணம்வேறு கூறினார்.

பத்திரிகையாளர்களுக்கான தரநிர்ணயம் முக்கியமானதுதான். அவர்கள் தமது தகுதியை, தொழில் நேர்த்தியை, தரத்தை உறுதிப்படுத்திக்கொள்ளும் ஒரு பொறிமுறை தேவைதான். அதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆனால், அதனைப் பத்திரிகையாளர்கள் தாமாக ஏற்படுத்திக்கொள்வதுதான் சிறந்ததே தவிர, அரசியல் காரணங்களுக்காக ஆட்சியாளர்கள் செய்வது ஏற்படுடையதல்ல. அத்தகைய முயற்சிகள் எவையுமே ஊடக சுதந்திரத்தின் மீதான அரசுகளின் கட்டுப்பாடாகவே பார்க்கப்படும். எதிர்க்கப்படும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகத்தின் ஒருங்கிணைந்த அபி-விருத்தி உட்பட அனைத்து முக்கிய திட்டங்களை முன்னெடுப்பதற்கும், பட்டுப்பாதை பயிலரங்கம் போன்ற திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கும், ஒன்றாக திட்டமிடுதல் கட்டியெழுப்புதல் மற்றும் பலன்களை பெறுதல் என்ற கொள்கைகளுக்கு ஏற்ப இலங்கையில் வாழ்வாதாரத் திட்டங்களை செயற்படுத்தவும் இலங்கை ஆளும்தரப்பு இணங்கியது'' என்றும் மேலும் கூறப்பட்டுள்ளது.

ஒரே தடம்; ஒரே சாலை ஒத்துழைப்பு என்பது பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் மட்டுமல்ல, தென் சீனக் கடல் மற்றும் இந்தியப் பெருங்கடலில் சீனாவின் புவிசார் அரசியல் மூலோபாயமாகும். சீனாவுக்கு எதிராக, 'இந்தோ-பசிபிக் வியூகம்' என்ற திட்டத்தில் அமெரிக்கா உள்ளது, இந்த அதிகாரப் போட்டி இந்தியப் பெருங்கடல் பகுதி உள்ளிட்ட ஆசியப் பிராந்தியத்தில் கடும் பதற்றத்தை உருவாக்கியுள்ளது என்பது இரகசியமல்ல. அது ஒரு பொருளாதார மற்றும் வர்த்தகப் போர்,

இது அரசியல் மற்றும் இராஜதந்திர நிலைப்பாட்டில் இருந்து ஒரு வெளிப்படையான இராணுவ மோதலாக வளரும் சாத்தியத்தை நிராகரிக்கமுடியாது. அங்கு, பல்வேறு பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் மற்றும் குவாட் ராணுவ ஒத்துழைப்பு ஆகியவற்றில் சம பங்குதாரராக அமெரிக்காவின் திட்டத்தை, ஒரு பிராந்திய சக்தியாக தமது அபிலாஷைகளுக்கு உட்பட்டு. இந்தியா ஆதரிக்கிறது. டிசெம்பர் 16, 2024 அன்று, சீனாவுடனான கூட்டறிக்கைக்கு சரியாக ஒரு மாதத்திற்கு முன்பு, இந்தியாவுடன் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை, இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் மூலோபாயம் மற்றும் அதன் அனுசரணையை பெறும் அமெரிக்காவின் திட்டத்திற்கு தற்போதைய ஆளும்தரப்பின் பக்கச் சார்ப்பை வெளிப்படுத்தியிருக்கிறது.

இவ்விரு அறிக்கைகளையும் ஆராயும்போது, இலங்கையும் சேர்ந்த இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் முக்கிய புவிசார் அரசியல் போரில் இலங்கையும் உள்வாங்கப்படுவதைக் காணமுடிகிறது.

சீனாவுடன் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இல்லாத வேறு பல முக்கிய உடன்படிக்கைகளும் ஜனாதிபதியின் இந்த பயணத்தின்போது செய்யப்பட்டுள்ளன. அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கு சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு அனுமதி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது அவற்றுள் முக்கியமானது. இது மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்து உத்தேசிக்கப்பட்ட திட்டம் என்பதுடன், ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியும் இதற்கு அனுமதியளித்தது. மக்கள் எதிர்ப்பின் காரணமாகவே இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க முடியாமல்போனது, அப்போது மக்கள்விடுதலைமுன்னணியும் இத்திட்டத்தின் முக்கிய விமர்சகராக இருந்தது. ஒருபுறம், அம்பாந்தோட்டை துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட புவிசார் அரசியல் திட்டத்தில் இலங்கை சிக்கிக் கொண்டதுதான் இந்தத் திட்டத்திற்கான எதிர்ப்பின் அடிப்படை. மறுபுறம், தற்போதுள்ள பெற்றோலியச் சட்டத்தின்படி இலங்கை ஆளும்தரப்பின் ஏகபோகமாக இருக்கும் எண்ணெய் இறக்குமதி, சுத்திகரிப்பு மற்றும் விநியோகம் வெளிநாட்டு நிறுவனங்களின் வசமாவதால் இலங்கையின் எரிசக்தி இறையாண்மைக்கு ஏற்படும் சிக்கல் எதிர்ப்பிற்கான மற்றொரு காரணம்.

முதலீடு என்று கூறப்பட்டாலும், அந்தப் பணம் இலங்கைக்கு எப்படி கிடைக்கும் என்பதில் தெளிவு இல்லாததும் மற்றொரு காரணமாக இருந்தது. அந்த காரணங்கள் எதுவும் இம்முறையும் மாறவில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகம் ஏற்கனவே சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு சீனாவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளதால், அதன் அருகில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதன் மூலம் அம்பாந்தோட்டை துறைமுகத்தின்கப்பல்எண்ணெய்வருவாயை இலங்கை இழக்க நேரிடும். இலங்கைக்கான இந்திய எண்ணெய்க் குழாய்களை இயக்கும் திட்டம் தொடர்பான பேச்சுக்களைத் தொடர தற்போதைய ஆளும்தரப்பு இந்தியாவுடன் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், திருகோணமலையில் மட்டுமன்றி கொழும்பு துறைமுகத்தில் கப்பல் எண்ணெய் விநியோகத்தின் வருமானத்தையும் இலங்கை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமல்ல இலங்கையின் எரிசக்தி இறையாண்மையையும் இழக்கும் அபாயம் மற்றும் இந்தத் துறைமுகங்களுக்கு அருகாமையில் இராணுவ வசதிகள் வழங்கப்படுவதன் ஊடாக தேசிய பாதுகாப்பு அபாயத்தையும் உருவாக்குகிறது. இந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இந்தியாவின் ஆதிக்கத்தின் கீழ் வருவதைக் காட்டுகின்றன, அதே நேரத்தில் அம்பாந்தோட்டை உள்ளிட்ட தென் மாகாணம் சீன அதிகாரத்திற்கு உட்படுவதாகத் தெரிகிறது. இந்த இரண்டு பிராந்திய சக்திகளும் கொழும்பில் ஒரு வலுவான தலையீட்டிற்கு தயாராகி வருவது ஆபத்தைமேலும்தீவிரமாக்கும். இலங்கையின் பொருளாதார இறையாண்மைக்கு மாத்திரமன்றி, அரசியல் சுயாதீனம், மக்களின் பாதுகாப்பு போன்றவை ஆபத்தில் தள்ளப்படுவதுடன் வளர்ந்து வரும் இந்த அரசியல் இயக்கவியல் தொடர்பில் இலங்கையின் உழைக்கும் வர்க்கம் உட்பட முழு மக்களின் கவனத்தையும் செயலூக்க ஈடுபாட்டையும் எதிர்பார்க்கின்றோம். மக்கள் ஆபத்தில் உள்ளனர்.

ஜனாதிபதியின் இந்தியா மற்றும் சீன பயணங்கள் தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ள புவிசார் அரசியல் முரண்பாடுகளின் முன்பாக ஆளும்தரப்பு எடுக்கவிருக்கும் நிலைப்பாடுகள் மிகவும் பாராதூரமானவையாகும் என நாங்கள் நம்புகிறோம். நீண்ட காலமாக இதே நிலைப்பாட்டில் இருந்து வரும் நாடாளுமன்ற எதிர்க்கட்சிகளிடம் இருந்து இதற்கான தீர்வை எதிர்பார்க்க முடியாது என்பது தெளிவாகிறது. எனவே, இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார-அரசியல்-புவிசார் அரசியல் -இராணுவச் சவால்களுக்கு மாற்று வழிகளை உருவாக்குவதிலும், அவற்றை யதார்த்தமாக்கும் திறனும் கொண்ட உழைக்கும் மக்கள் உட்பட இலங்கை மக்களிடம், ஒருங்கமைக்கப்பட்ட தலையீட்டிற்கு நாங்கள் வேண்டுகோள் விடுக்கிறோம் - என்றுள்ளது.

## நான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றில் ஒன்றாகக் குறைப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். மூன்றில் இரண்டு எனக் கூறினால் மக்களுக்கு புரியாது என்பதற்காக 9000 ரூபா கட்டணம் 6000 ஆகக் குறைக்கப்படும் என்று உதாரணத்துடன் குறிப்பிட்டார். ஆனால் ஆட்சியைப் பொறுப்பேற்று 4 மாதங்கள் கடந்துள்ள போதிலும், ஆளும்தரப்புக்கு இன்னும் அந்த 'மிகக் குறுகிய காலம்' தோன்றவில்லை.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு 20 சதவீதத்தால் மின் கட்டண குறைப்பை பரிந்துரைத்துள்ளது. ஆணைக்குழுக்கள் இவ்வாறு சுயாதீனமாக செயற்படும்போது அவற்றின் தலைவர்கள் பதவி நீக்கப்படுவார்களேயன்றி, பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படமாட்டாது. இம்முறை என்ன நடக்கப்போகிறது என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

மக்கள் செல்வாக்கு ஆளும்தரப்புக்குக் குறைந்துவருவதைஅறிந்துகொண்டதாலேயே மின்கட்டணமும் குறைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் ஒத்துழைப்புடன் கிழக்கில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி புதிதாக எதையும் கூற வேண்டியதில்லை. காரணம் மூன்று ஆண்டுகளுக்குமுன்னரேநாம்அவற்றுக்கான அனைத்து பணிகளையும் நிறைவு செய்துவிட்டோம்.

2020இல் நாம் ஆட்சியமைத்த போது 99 எண்ணெய் தாங்கிகளும் இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்ட 14 எண்ணெய் தாங்கிகளைத் தவிர, ஏனைய அனைத்தையும் மீளப் பெறுவதற்கு நாமே நடவடிக்கை எடுத்திருந்தோம்.

எனது ஆடையை தற்போதைய ஜனாதிபதி அணிந்துசெல்வதுநகைப்பிற்குரியதாகவுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு நீக்கப்பட்டு அவர்களது உத்தியோகபூர்வ இருப்பிடங்கள் பறிக்கப்பட்டால், எதிர்காலத்தில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள், பாதாள உலகக் குழுவினர் மற்றும் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு சிறந்த வாய்ப்பாக அமைந்துவிடும். எனவே அரச தலைவர்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் செயற்பாடுகளை ஆளும்தரப்பு தவிர்த்துக்கொள்ள வேண்டும் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பல்தரப்பினரை ஒன்றிணைத்து சிவில் சமூக அமைப்பு உதயம்

(றமீஸ்)

இந்நாட்டில் கடந்த காலத்தில் சிவில் சமூக பிரதிநிதிகளை உள்ளடக்கி காத்திரமான கொள்கை உருவாக்கம் மேற்கொள்ளப்படுவதில் தவறிழைக் கப்பட்டமையால் பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை சமூக மட்டத்தவர்களுக்கு ஏற்பட்டது.

அந்நிலைமையிலிருந்து அனைத்து இன சமூகத்தவர்களையும் மாற்றிக் கொள்ளும் வகையில் புதிதாக சிவில் சமூக அமைப்பான இன்குளூட் எனும் அமைப்பொன்றை உருவாக்குவதற்கான தேவை எமக்கு ஏற்பட்டது என இன்குளூட் அமைப்பின் செயற்பாட்டாளரும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் தெரிவித்தார்.

'இன்குளூட்' அமைப்பின் உதயம் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு அமைப்பின் பிரதான ஏற்பாட்டாளர் கலாநிதி றகீப் ஜஃபர் தலைமையில் அட்டாளைச்சேனைதனியார்வரவேற்பு மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

சிவில்சமூகம்ஜனநாயகப்பரப்பிலும், அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுக்கின்றபோது முக்கிய பங்காளிகளாக நவீன ஜனநாயகத்தின் மூலம் ஆக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் கொள்கை வெளிப்பாட்டின் அடிப்படையில் அனைத்து மக்களையும் இணைத்துக் கொண்டு செயற்படவுள்ளதாக புதிய அரசாங்கம் தமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளது.

அரசாங்கத்தின் இவ்வாறான நிலைப்பாட்டிலும் கூட சிவில் சமூகத்தினர் ஒன்றுபட்டு அரசாங்கத்தை வழிநடத்த வேண்டியதும் அதற்குப் பங்களிப்புச் செய்ய வேண்டியதுமான தேவை உலகரங்கில் உணரப்பட்டுள்ள நிலைமைக்கு ஏற்றால் போல் இலங்கையிலும் சிவில் சமூகத்தின் செயற்பாடு அமைய வேண்டும்.

எமது நாட்டினைப் பொறுத்தவரையில் பல்லின மொழி, மத, கலாசார வேறுபாடுகளைக் கொண்ட மக்களை உள்ளடக்கியதான ஒரு நாடு என்பதால் அனைத்து மக்களையும் உள்வாங்கியதான கொள்கை உருவாக்கச் செயன்முறை என்பது மிக அவசியமான விடயமாக பார்க்கப்படுகின்றது.

நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து மக்கள் நல செயற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் இந்த சிவில் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. சமய, சமூக, பொருளாதார மற்றும் கலாசார சவால்களை தனித்தனி அமைப்பாக நின்று இயங்குவதிலும் பார்க்க அனைவரையும் ஒன்றிணைத்து செயற்படுவதால் இத்துறைகளில் பாரிய பயன்பாட்டினை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த அமைப்பின் மூலம் சிறுபான்மைச் சமூகத்தினர், புறக்கணிக்கப்பட்ட தரப்பினர், தொழிலாளர்கள், பெண்கள், மாற்றுத் திறனாளிகள், சிறுவர்கள் போன்ற பல்தரப்பட்டவர்களின் உரிமைகள் தேவைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் போன்றவற்றில் அக்கறை செலுத்தி செயற்படவுள்ளோம். - என்றார்.

# முல்லைத்தீவு கடற்கரையில் நடைபெற்ற பட்டத்திருவிழா

முல்லைத்தீவு - வட்டுவாகல் கிராமத்தைச்சேர்ந்த உறவுகளின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை பட்டத்திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.



இந்தப் பட்டத்திருவிழாவில் பிரதம விருந்தினராக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பங்கேற்றிருந்தார்.



அதனையடுத்து விருந்தினர் களால் சிறார்களிடம் பட்டங்கள் கையளிக்கப்பட்டு குறித்த பட்டத்திருவிழா வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் விருந்தினர்களாக வன்னிமாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்துரைராசா ரவிகரன், முல்லைத்தீவுமாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன், கரைதுறைப்பற்று பிரதேசசபைச் செயலாளர் இராஜயோகினி ஜெயக்குமார், வட்டுவாகல் அறநெறிப்பாடசாலையின் முதல்வர் அப்புத்துரை செல்வரட்ணம் ஆகியோர் பங்கேற்றிருந்ததுடன், பெருந்திரளான மக்களும் இந்த பட்டத்திருவிழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோர் பாடசாலையில் தஞ்சமடைவு

(தில்சாத் பர்வீஸ்)

சேனநாயக்காசமுத்திரத்தின் நீர்மட்டம் உயர்வடைந்ததால் இடம்பெயர்ந்த மக்கள் தாருஸ்ஸலாம் மகா வித்தியா லயத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட மல்கம் பிட்டி கிராம சேவகர் பிரிவில் உள்ள 18 குடும்பங்களைச் சேர்ந்த 62 பேர் தற்காலிகமாக ஞாயிற்றுக்கிழமை சம்மாந் துறை தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை பார்வையிட தேசிய அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் அஸாறுடீன் சலீம் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அவர்களின் தேவைகளை கேட்டறிந்து கொண்டார்.

இதில் கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர் என் பலரும் கலந்து கொண்டனர்.







# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

(சியாத்)

அக்கரைப்பற்று முதலியார் வீதியைச் சேர்ந்த ஆதம் பாவா நூறுல்லாஹ், தீவு முழுவதிற்குமான சமாதான நீதவானாக அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஏ.சீ.றிஸ்வான் முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அரச சுகாதார முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் இவர் இந்தியாவின் காண்பூர் பல்கலைக்கழகத்தின் வணிக நிர்வாக பட்டதாரியான இவர் அக்கரைப்பற்று அல் பாத்திமியா வித்தியாலயம் மற்றும் அக்-அஸ்ஸிராஜ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

ஒக்டபேட் இசைக் வாத்திய கலைஞரான இவர் அக்கரைப்பற்று கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி குழுவின் செயலாளராகவும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தின் பொருளாளராகவும் பணியாற்றி வருவதோடு அபூபக்கர் ஆதம் பாவா உதுமாலெவ்வை அவ்வாக்குட்டி ஆகியோரின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மக்கள் வரிப் பணத்தில் சொகுசு தேவையா?

மக்களின் வரிப் பணத்தில் மாதாந்தம் 4G லட்சம் ரூபாயைச் செலவிட்டு ஒரு முன்னாள் ஜனாதிபதி சொகுசு வாழ்க்கையை அனுபவிப்பதை பாதுகாப்பு மற்றும் உரிமை என்ற பெயரில் நியாயப்படுத்தச் சிலர் முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது. அதிலும் பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டு இலங்கையர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் மூன்று நேர உணவைக்கூட முழுமையாகப் பெறமுடியாது அவலப்படும் நிலையிலும் பணம் படைத்தவர்கள் சுகபோகத்திற்காக அரசுப் பணத்தை எதிர்பார்ப்பது ஏற்றுக்கொள்ளவோ மன்னிக்கவோ முடியாதவைகள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவரது குடியிருப்புக்கு மாதாந்தம் 4.G மில்லியன் ரூபாய் வாடகை செலுத்தவேண்டும் அல்லது அதைவிட்டு வெளியேறவேண்டும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட அனைத்து உத்தியோகபூர்வ இல்லங்களையும் ஆளும்தரப்பு மீளப்பெறும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.

களுத்துறை கட்டுகுருந்தவில் நடந்த கூட்டம் ஒன்றில் கருத்து தெரிவித்த அவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இல்லத்திற்கான வாடகை மாதத்திற்கு 4.G மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள சட்டங்களின்படி, முன்னாள் ஜனாதிபதிகள் வசிப்பதற்கான வீடு அல்லது அவர்களின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கைப் பெறுவதற்கே உரிமை உண்டு.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதிகள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டும் அல்லது தாம் தங்கியிருக்கும் வீடுகளுக்கான வாடகையை அவர்களே செலுத்த வேண்டும். அவர்களுக்கான உதவி கொடுப்பனவை அரசாங்கம் 30,000 ரூபாயாகக் கட்டுப்படுத்தும், இதுவே அவர்களின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்காகும்'' என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இதற்கு உடனடியாகவே மகிந்த தரப்பினரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. மகிந்த மக்கள் வரிப் பணத்தை வீணடித்து அனுபவிக்கும் சொகுசை ஆளும்தரப்பு தர மறுப்பது, அவரைப் பழிவாங்கும் செயல் என்கிறார் அவரது மகனான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச. இது மகிந்தவைக் கொல்வதற்கான சதி என்பது போன்று கருத்துத் தெரிவிக்கிறார் பொது ஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரமோத் சி தொலவத்த.

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை அவரது இல்லத்தில் இருந்து வெளியேற்ற ஆளும்தரப்பு சதி செய்கிறது'' என்று தொலவத்த தெரிவிக்கிறார். இதுவேளை, மகிந்த அவர் குடியிருக்கும் வீட்டைவிட்டு வெளியேறவேண்டும் அல்லது அதற்கான வாடகையை அவரே செலுத்தவேண்டும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்திருப்பது பழிவாங்கும் செயல் என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினரான நாமல் ராஜபக்ச.

ஆளும்தரப்பு வெளியேறும்படி முறையாக, எழுத்து –மூலம் அறிவித்தால் மகிந்த அவரது குடியிருப்பைவிட்டுச் செல்வதற்குத் தயாராகவே இருக்கின்றார் என்றாலும், அப்படி அவர் வாழ்வதற்கு அவருக்கு –உரிமை இருக்கின்றது என்றும் அது அவரது பாதுகாப்புக்காக கிட்டும் உரிமை என்றும் அவர் கூறியிருக்கிறார். மகிந்தவுக்கு, அதாவது அவரது தந்தைக்கு உயிராபத்து இருப்பதால் அந்த வசதி வழங்கப்படுவது கட்டாயம் என்ற வகையில் அவரது கருத்து இடம்பெற்றுள்ளது.

இவையெல்லாம் துன்பப்படும் மக்களின் நலன்கள் குறித்து எந்தவித அக்கறையுமற்ற அரசியல்வாதிகளின் கருத்துக்களாகவே படுகின்றன. மகிந்த ராஜபக்ச அரசு வழங்கும் வசதிகள் கொண்ட வீட்டில் வாழவேண்டியளவிற்கு வறுமைப்பட்டவர் அல்லர் என்பதை இலங்கைமுழுவதும் அறியும். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இருக்கும் சொத்துக்கள் பற்றியம் நாட்டு மக்கள் நன்கு அறிவர். அப்படியிருக்கும்போதும் அரச பணத்தில்தான் சொகுசு அனுபவிப்போம் என்று இவர்கள் அடம்பிடிப்பது முறையானது அல்ல. மகிந்த மட்டுமல்ல முன்னாள் அரசுத் தலைவர்கள் அனைவருக்குமே இது பொருந்தும்.

அவர்கள் நாட்–டுக்குச் செய்த சேவைகளுக்காக அவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது அரசின் கடமையாக இருக்கலாம், ஆனால் அவர்களது சொகுசு வாழ்க்கையைப் பேணவேண்டிய அவசியம் எதுவும் அரசுக்கு இல்லை. எனவே ஆளும்தரப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்னர்தான் வெளியேறுவோம் என்று அடம்பிடிக்காமல், ஆளும் தரப்பு வழங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகளுடனும் ஏனைய வசதிகளுடனும் முன்னாள் ஜனாதிபதிகள் தமது சொந்த இல்லங்களுக்குச் செல்வதே சிறந்தது.

# அறுவடையைத் தடுத்து நிறுத்தியவர்களே வெள்ள அழிவுக்கு நட்டஈடு தரவேண்டும்

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஆவேசம்

மட்டக்களப்பில் கடந்த 10 தினங்களுக்கு முன்னர் விளைந்த வேளாண்மையை அறுவடை செய்யவிடாது விவசாய கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்ட திகதியில்தான் அறுவடை செய்ய வேண்டும் என்று சிலர் அமைப்புகள் என்ற பெயரில் மனித உரிமை ஆணைக் குழுவுக்கு சென்று தடுத்தனர். இதனால் இன்று மழை வெள்ளத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மை வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. இதைத் தடுத்தவர்களே இதற்கான நட்டத்தை தர வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக இரு தினங்களாகப் பெய்துவரும் கன மழையால் மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசசெயலாளர் பிரிவில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கி வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2024-2025 ஆண்டு பொரும் போக வேளாண்மை செய்கை தொடர்பாக முன்னோடி கூட்டத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி நெல் அறுவடை என தீர்மானிக்கப்பட்டு முடிவு எட்டப்பட்டது.

இருந்தபோதும் கடந்த 10 தினங்களுக்கு முன்னர் அறுவடை செய்யும் நிலையில் வேளாண்மை விளைந்திருந்தது. இந்த நிலையில் அறக்கொட்டி பூச்சியின் தாக்கமும் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் 18 ஆம் திகதி தொடக்கம் கனமழை பெய்யும் என்றும் விவசாயிகளை அவதானமாகச் செயற்படுமாறும் அறிவித்திருந்தனர். இதனையடுத்து மாவட்டச் செயலரைச் சந்தித்து கனமழைவர இருக்கின்றது. 10 நாள்களுக்கு முன்னர் அறுவடை செய்யவேண்டிய நிலையில் பெருளவில் விளைந்த வேளாண்மை உள்ளது.ஆகவே அறுவடையை செய்ய அந்தந்த அமைப்புக்களுடன் கலந்துரையாடி முடிவெடுக்குமாறு கேட்டுக்கொண்டோம். அதற்கு மாட்டச் செயலர், வாய்மூலமாக ஒரு உத்தரவு தந்தார். அமைப்புக்கள் ஓம் என்றால் உடனடியாக அறுவடை செய்யுமாறும் மழை வெள்ள பாதிக்காது செய்யுமாறும் தெரிவித்தார்.

அந்த வகையில் ஒரு விவசாயி அறுவடை செய்ய ஆரம்பித்ததை அடுத்து, சிலர் அமைப்புக்கள் என தெரிவித்துக்கொண்டு - வேறு பெயர்களை சூட்டிக் கொண்டு பச்சைக்காய்களை வெட்டப்போகின்றார்கள் என்று பொய் சொல்லி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து, அறுவடை செய்வதைத் தடுத்தனர். இதனால் இன்று கனமழை வெள்ளத்தால் வயல் நிலங்கள் தண்ணீரில் மூழ்கி மிதக்கின்றன.

தற்போது வயல் நிலங்களைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கின்றது. ஒரு தொழிலைச் செய்யப் போறவன் அந்தத் தொழிலில் அனுபவம் பெற்றவனாக இருக்கவேண்டும். ஆனால் எதுவுமே தெரியாதவர்கள், ஒரு ஏக்கர் காணி இல்லாதவர்கள் இங்கு வந்து இந்த விவசாயத்தைபற்றி கதைக்கிறார்கள்.

பெரும்போகசெய்கைஎன்பது ஒருவருக்கு முந்தும் ஒருவருக்கு பிந்தும். இருந்தபோதும் விளைந்த வேளாண்மை நிக்காது இந்த மழை காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மை தண்ணீரில் மிதக்கின்றது. அத்துடன் அறக்கொட்டி பூச்சி இருந்தும் விளைந்த வேளாண்மையை வெட்டிக்கொள்ள முடியாத நிலையை சிலர் உருவாக்குகின்றனர் என்றால் இவர்கள் என்ன விவசாயிகள்?

மூன்று அழிவுகள் இடம்பெற்றுள்ளன. வெள்ளம், பூச்சி, நேரத்துக்கு வெட்டவில்லை இந்த காரணத்தால் இந்த அழிவு ஏற்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்துக்கு ஏற்றவாறு தீர்மானத்தை மாற்றி தந்திருக்கலாம். விளையாதவர்கள் பிந்தி அறுவடை செய்யமுடியும். ஆனால் அவர்கள் நகரில் இருந்துகொண்டு பச்சைக்காய் என சொல்லிக் கொண்டு எங்களுடைய வாழ்வாதாரத்தை நாசமாக்குகின்ற வேலையைச் செய்கின்றனர்.

முழு நெல்லும் முளைத்திதுவிட்டது இதனை அறுவடை செய்தும் பிரயோசனம் இல்லை இது சாப்பாட்டுக்கும் எடுக்க முடியாது. வியாபரியும் எடுக்க மாட்டான். மனித உரிமையில் முறைப்பாடு செய்தவர்களிடம் இந்த நட்டத்தைப் பெற்றுத் தாருங்கள்.

மாவட்டச் செயலர் விளைந்த வேளாண்மையை வெட்டுமாறு தெரிவிதார். அவர் தெரிவித்த மாதிரி நாங்கள் வெட்டியிருந்தோம் என்றால் பாதுகாப்பாக நெல்லை எடுத்திருக்கலாம். ஆனால் தற்போது உன்னிச்சைக் குளம் வான் கதவு திறக்கப்பட்டுள்ளது. இதனால் பெரும் அவு ஏற்பட்டுள்ளது.

விவசாயம் தெரியாத சில வெளி நபர்கள் அமைப்பு என்று இருப்பவர்கள் தடைபோட்டு எமது வேளாண்மை நாசமாகியுள்ளது. இந்த நட்டத்தை அரசு எப்படித் தரமுடியம்? மனித உரிமை ஆணைக்குழுவில்போய்தடைபோட்டவர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு என்ன பதில் சொல்லபோகின்றனர் -- என்றார்.

# மன்னார் தமிழ் சங்கத்தால் அடம்பனில் பொங்கல் விழா

மன்னார் தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில், தமிழர் திருநாளாம் தைத்திருநாள் பொங்கல் விழா பண்பாட்டியல் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் கனகேஸ்வரன் மற்றும் சிறப்பு விருந்தினராக அடம்பன் மத்திய மகா வித்தியாலய அதிபர் மைகிறிஸ்ரியான் உட்பட அடம்பன் பங்கு தந்தை சீமான், சட்டத்தரணி எம்.சபூர்தீன், தமிழ் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தைத்திருநாள் பொங்கல் விழா பண்பாட்டியல் நிகழ்வின் ஓர் அங்கமாக வரவேற்பு நடனம், கிராமிய நடனம், கவிதை, பேச்சு, குழுப்பாடல், நவீனம் குறியீட்டு நாடகம், கருத்துக்களம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. தமிழ் சங்கத்தால் விருந்தினர்களுக்கு நினைவு சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

# யாழ். கலாசார மையத்தின் பெயர் மாற்றப்பட்டமை பெரும் அதிர்ச்சி

## காரணத்தை பகிரங்கப்படுத்த கேட்கிறார் டக்ளஸ்

யாழ்பபாணத்தில் அமைக்கப் பட்டுள்ள கலாசார மையத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஈழத் தமிழர்களின் கலாசார பாரம் பரியங்களைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதை நோக்கமாக கொண்டு இந்திய அரசால் வழங்கப்பட்ட இந்தக் கலாசார மையம் தமிழ் மக்களின் அடையாளமாகத் தற்போது காணப்படுகின்றது.

கடந்த 2010 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ச தலைமையில் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட வேளையில், அப்போதைய பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசிடம் என்னால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே குறித்த கலாசார மையத்தை இந்தியா எமக்கு அளித்திருக்கின்றது.

யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் அதனை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் அனைத்தும் எம்மால் முன்னெடுக் கப்பட்டிருந்தன. இவ்வாறான பின்னணியிலேயே இசந்துப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உலகப் பொதுமறையான திருக்குறளை எமக்களித்த திருவள்ளுவர் எமது மதிப்பிற்குரியவர். அவரையும் அவருடைய ஆளுமையையும் போற்றிப் புகழ்வதில் தமிழர்கள் யாருமே பின்நிற்கப் போவதில்லை. கடந்த காலங்களில் இந்திய அரசால் வழங்கப்பட்ட திருவள்ளுவர்



சிலைகளை எமது மக்கள் ஆர்வத்துடனும் பெருமிதத்துடன் பிதிஷ்டை செய்து பராமரித்து வருகின்றனர்.

எனினும் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களின் அடையாளங்களுள் ஒன்றான 'யாழ்ப்பாணம்' என்ற பெயர் நீக்கப்பட்டிருப்பதானது, தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்க முனைகின்ற செயற்பாடா என்று எண்ணத் தோன்றுகிறது.

தீய சக்திகளின் மறைகரம் இந்தப் பெயர் மாற்றத்தின் பின்னணியில் இருக்குமோ என்ற நியாயமான சந்தேகத்தை எமது மக்களுக்கு ஏற்படுத்தி இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறான சந்தேகங்கள், இந்த நாட்டில் புரையோடிப் போய் இருக்கும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவசியமான தேசிய நல்லிணக்க முயற்சிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும். இந்த வகையில், இதனுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்த இந்திய துதரக அதிகாரிகள், இலங்கையின் தற்போதைய புத்தசாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் கடற் றொழில் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர் போன்றோர் பெயர் மாற்றப்பட்டமைக்கான காரணம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் -என்றார்

# மட்டு. போராதீவுப்பற்றில் கவிதை நூல் வெளியீடு

மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பெரிய போரதீவு பட்டாபுரம் இளைஞர்ஒன்றியத்தால்கிஷாலினியின் 'முதல் கனவு' கனாக் கவிதை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பெரிய போரதீவு எம்.பிறதேர்ஸ் மண்டபத்தில் தினேஷ் தலைமையில் இடம் பெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ;பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

பொதுச் சுகாதார பரிசோதகர் குபேரன், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆலய அறங்காவலர் சபையினர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நாம் ஒரு இனம் தேசிய இனமாக கருதப்படுவதற்கு மொழி, கலாசாரம், பண்பாடு போன்றவை முக்கியமான விடயங்கள். அவற்றை எமது இளம் சமுதாயம் தொடர்ச்சியாக கொண்டு செல்ல வேண்டும் என்பதுடன் அடுத்தடுத்த சந்ததியினருக்கும் இவற்றை சரியான கடத்த வேண்டும். அப்போதுதான் நாம் அனைவரும் இணைந்து எமது இலக்கினை அடையலாம். அதற்கு அனைத்து கிராம மட்ட அமைப்புக்களும் கிஷாலினி போன்ற யுவதிகளினுள் மறைந்துள்ள கலையார்வங்களை வெளிக்கொணரவேண்டும்.

அந்தவகையில் இளைஞர் ஒன்றியம் இது போன்ற நிகழ்வுகளை செய்வதை வெகுவாகப் பாராட்டுகின்றேன். அத்துடன் இந்தக் கவிதை நூலை எனது செலவில் போரதீவுப்பற்று பிரதேசத்தில் உள்ள அனைத்து நூலகங்களுக்கும் வழங்க ஏற்பாடு செய்துள்ளேன் - என்று சாணக்கியன் தனது உரையில் தெரிவித்தார்.

# ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

ஊர்காவற்றுறை பொலிஸாரின் ஏற்பாட்டில் கொழும்பு லயன்ஸ் கழகத்தால் வேலணை கல்வி கோட்டத்தில்தெரிவுசெய்யப்பட்டதரம் 5மாணவர்களுக்குபெறுமதியானகற்றல் உபகரணப் பொதி வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு வேலணை மத்திய கல்லூரியில் இடம்பெற்றது . 100 மாணவர்களுக்கு உரிய புத்தகப் பை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதேவேளை, ஊர்காவற்றுறை பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரிக்கு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால, ஜே.பி.எஸ். ஜெயமகா, ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாடசாலை அதிபர்கள் , ஆசிரியர்கள், பெற்றோர்கள் , மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



# பெண்கள் பொதுத் துறைகளில் ஈடுபடுவதும் ஆண்கள் துணைநிற்பதும் வரவேற்கத்தக்கது

## கண்டி உதவி இந்தியத் தூதுவர் பெருமிதம்

பெண்கள் பொதுத்துறைகளில் ஈடுபடுவதும், அதற்கு ஆண்கள் துணை நிற்பதும் வரவேற்கத் தக்க பண்புகளாகும் என கண்டி உதவி இந்தியத் தூதுவர் வீ.எஸ். சரன்யா தெரிவித்தார்.

கண்டி சஹஸ் உயன பூங்காவில் நடைபெற்ற பொங்கல் தின வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் -

நானும் பொங்கல் தினத்தை கொண்டாடும் ஒருவராக உள்ளேன். ஆனால், எனக்கு இம்முறை எனது சொந்த ஊரில் அதனை கொண்டாட முடியாமல் போனது. இருப்பினும் அது பற்றி எந்தக் கவலையும் ஏற்படாமல் எனது சொந்த ஊரில் கொண்டாடும் ஒரு நிகழ்வு போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. அதாவது இந்தியாவில் எமது பிரதேசத்தில் கொண்டாடும் அதே விதமாக இங்கு கொண்டாடப்பட்டமை எனக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது.

மேலும், மகளிர் குழு ஒன்று ஒழுங்கு செய்தமை எனக்கு இன்னும் மகிழ்ச்சியாக உள்ளது. இப்படியான பொதுப் பணிகளில் மகளிர் ஈடுபடுவது வரவேற்கத்தக்கது. அதனை நாம் ஊக்குவித்தல் வேண்டும். ஆனால், இங்கு நடந்த வைபவத்தை நோக்கும்போது மேற்படி பெண்களது தொழிற்பாட்டுக்கு ஆண்கள் துணையாக நின்றிருப்பர் என என்னால் உணர முடிந்தது. இது இன்னும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

அந்த வகையில் இதனை ஒழுங்கு செய்த கண்டி இந்து மகளிர் அமைப்பு மற்றும் அதற்கு துணையாக நின்ற பொது அமைப்புக்கள்,





இவர்களுக்கு ஊக்கம் வழங்கிய ஆண்கள் எனப் பலரையும் பாராட்டுகிறேன் .- என்றார்.

கண்டி இந்து மகளிர் சங்கத்தின் தலைவி ஆர். கலையரசி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் விசேட அதிதிகளாக கண்டி மாநகர ஆணையாளர் இந்திகா அபேசிங்க, கண்டி தேசியவைத்தியசாலையின்பணிப்பாளர் டாக்டர் இரேசா பெர்னாண்டோ உட்பட கண்டி நகர வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மக்களோடு மக்களாகப் பயணித்தார் போக்குவரத்து அமைச்சர் ரத்நாயக்க

## ரயில் பயணத்தைக் கண்காணிக்க

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று (திங்கட்கிழமை) காலை மொரட்டுவையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி அலுவலக ரயிலில் மக்களோடு மக்களாக பயணித்துள்ளார்.

இந்த பயணத்தின்போது, பயணிகள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகள் குறித்து பிமல் ரத்நாயக்க பயணிகளுடன் உரையாடும் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

இவர் ஊடகங்களுக்கு அறிவிக்காது, ரயில் பயணத்தின்போது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கண்காணிக்க நேரடி கள ஆய்வை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது, அடிக்கடி இடம்பெறும்



ரயில் தாமதங்கள், மின் விசிறிகள் பழுது, ரயில்களில் ஏறுவதில் மாற்றுத் திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள், தண்டவாளங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் சுகாதாரக்கேடு, பாதுகாப்பற்ற பாழடைந்த ரயிலை தொடர்ந்து பயன்படுத்தல் போன்ற பிரச்சினைகளை பொதுமக்களிடம் இருந்து கேட்டறிந்துள்ளார்.

# வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட இளம் குடும்பஸ்தர் பரிதாபச் சாவு

வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துக்கல் என்கிற பகுதியிலேயே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை - பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

தனது மனைவி மற்றும் உறவினர் ஒருவருடன் அந்த நபர் கரப்பொல - முத்துக்கல் வழியாக சேனபுர பகுதிக்கு வெள்ள நீரை கடந்து சென்றுகொண்டிருந்தபோதே அவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை, அவரது மனைவி மற்றும் மற்றைய நபர் மரக்கிளை ஒன்றினைப் பிடித்தவாறு உயிர் தப்பியுள்ளனர்.

உயிரிழந்தவரின் உடல் மருத்துவப் பரிசோதனைக்காக வெலிகந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் வெலிகந்தை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# மாயவனூர் பகுதில் திருட்டுச் சட்பவம்

இராமநாதபுரம் பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட மாயவனூர் பகுதியில் கடந்த 05.01.2025 அன்றைய தினம் தனது உறவினர் வீட்டில் உறவினர் இல்லாத சமயத்தில் வீட்டில் இருந்த 12/2பவுன் தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இராமநாத பொலீஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக பொலீஸாரின் தேடுதலின் போது 12.01.2025அன்று சந்தேக நபர் சிக்கினார்.

சந்தேக நபரிடமிருந்து வெறுமனே 8 பவுன் தங்க நகைகளை மீட்கப்பட்டுள்ளதாகவும் களவாடப்பட்டதில் மிகுதி நகைகளை மீட்கும் நடவடிக்கையில் போலீசார் தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் சந்தேக நபர் மற்றும் மீட்கப்பட்ட தடயப் பொருள்களை கிளிநொச்சி நீதிமன்றல் முற்படுத்தபட்ட பொழுது 14 நாள்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை இராமநாதபுரம் போலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். 113

# கலாவெள குளத்தின் வான்கதவுகள் திறப்பு

(சியாஜ் )

இலங்கையின் மிகப் பெரிய குளங்களில் ஒன்றான கலாவெள குளம், கடும் மழை காரணமாக நீர்நிரம்பியுள்ள நிலையில் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அநுராதபுரம் மாவட்டத்தின் கலாவெள மற்றும் பளளுவெள கிராமங்களின் கிழக்குப் பகுதியில் பல்லாயிரம் ஏக்கர் பரப்பளவில் கலாவெள குளம் பரந்து விரிந்துள்ளது.

அங்கிருந்து விடுவிக்கப்படும் நீர் அநுராதபுரம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மட்டுமன்றி புத்தளம் மாவட்டத்தின் சில பகுதிகள் வரை நீர்ப்பாசன மற்றும் பிற தேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

இந்நிலையில் நாட்டில் தற்போது பெய்து வரும் கனமழை காரணமாக கலாவெள குளம் நிரம்பி வழியத் தொடங்கியுள்ளது.

அதன் காரணமாக மேலதிக நீரை வெளியேற்றும் வகையில் நேற்றைய தினம் குளத்தின் அவசர கால வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

தற்போதைய நிலையில் கலாவெள குளத்தில் இருந்து ஒரு செக்கனுக்கு 19 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுகின்றது. இதன் காரணமாக கலாஓயாவின் புத்தளம் வரையான இருமருங்கிலும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், அப்பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானமாக இருந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# பாவற்குளத்தின் 4 வான்கதவுகளும் இரண்டு அடிக்கும் மேல் திறப்பு

## நெளுக்குளம் - நேரியகுளம் வீதியில் போக்குவரத்து தடை

வவுனியா, பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதால் அதன் 4 வான் கதவுகளும் 2 அடிக்கு மேல் திறக்கப்பட்டுள்ளதால் நெளுக்குளம் - நேரியகுளம் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாக மத்திய நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன் பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளவான 19.4 அடியை அடைந்துள்ளதால், அதன் ஒரு வான் கதவுகள் இரண்டரை அடியும், மூன்று வான்கதவுகள் இரண்டு அடியும் திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர்பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் குளத்து நீர் நெளுக்குளம் - நேரியகுளம் வீதியை மேவி பாய்ந்து வருவதால் அவ் வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

அத்துடன் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவகுளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியாபாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் எனவும் மத்திய நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. 100

# வெள்ள நீரில் மூழ்கிய விவசாய நிலங்கள்

## விவசாயிகள் அங்கலாய்ப்பு

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எல்லைக்குட்பட்ட நைனாகாடு சாவாற்றின் (பனையடி, இறக்கம்) உடைப்பெடுத்துள்ளமையால் பல விவசாய நிலங்கள் நீரில் மூழ்கி உள்ளன.

இவற்றுள் சாவாறு ஆஸ்பத்திரி பாம் முழுமையாக பாதிக்கப்பட்டுகாணப்படுகிறது. அதுமட்டுமின்றி வடசேலியா விவசாய நிலம் பகுதியளவு பாதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகவிவசாயிகள் கருத்து தெரிவிக்கும் போது -

கடந்த வெள்ள அனர்த்தத்தால் சாவாறு பனையடி இறக்கம் உடைந்த நிலையில் காணப்பட்டது. அதனை உரியமுறையில் சீரமைக்கப்படாமையால்இன்று இவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு முழு பொறுப்பும் உரிய அதிகாரிகளே அதுமட்டுமின்றி இவர்களுக்கு எதிராக நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்ய இருக்கிறோம் எனத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு..



# மீனவரினது வலையில் சிக்கிய மனித எலும்கள்



களுத்துறை, மில்லனிய, ஹல்தொட்ட பிரதேசத்தில் உள்ள கால்வாய் ஒன்றில் மீன்பிடி வலையிலிருந்து மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கால்வாய்க்கு மீன்பிடிக்கச் சென்ற குழு ஒன்று ஓடைக் கரையிலுள்ள மூங்கில் புதருக்கு அருகில் மீன்பிடி வலையை வீசிய போது வலையிலிருந்து மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது மேலும் பல மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டதையடுத்து, இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர்,ஹொரணைநீதிவான் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு மனித எலும்புகளை ஹொரண சட்ட வைத்திய அதிகாரியிடம்ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# கற்பிட்டி இந்து இளைஞர் மன்ற பொங்கல் விழா ஞாயிறன்று

(சியாஜ்)

கற்பிட்டி இந்து இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் கற்பிட்டி ஸ்ரீவேல்முருகன் ஆலய நிர்வாகத்தின் அனுசரணையில் ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் இடம்பெற்ற தைப்பொங்கல் விழா இடம்பெற்றது.

கற்பிட்டி இந்து இளைஞர் சேவை மன்றத்தால் அறநெறிப் பாடசாலைமாணவர்களிடையே கலை கலாசார விழுமியங்களை ஊக்குவிக்கும் வகையில் அறநெறிப் பாடசாலை ஆசிரியைகளின் நெறிப்படுத்தலுடன் பெற்றார்களின் பங்களிப்புகளுடனும் இடம்பெற்ற தைப்பொங்கல் விழா சிறப்பு பூஜையை கற்பிட்டி ஸ்ரீவேல் முருகன் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ வரதேஸ்வரக் குருக்கள் நடத்தியதுடன் ஆசியுரையினையும் நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.

# மயக்கமருந்து கலந்த குளிர்பானத்தை சாரதிக்கு கொடுத்து நகை கொள்ளை

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

வாகனசாரதிக்குமயக்கமருந்துகொடுத்து, சாரதியின் 05 பவுண் நகைகளை இருவர் கொள்ளையடித்துச்சென்றசம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

யாழ். நகர் பகுதியில் வாடகை முறையில் இயங்கும் கன்ரர் ரக வாகனத்தின் சாரதி ஒருவரது நகைகளே ஞாயிற்றுக்கிழமை கொள்ளையடிக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

வாகன வாடகை தரிப்பிடத்துக்கு சென்ற இருவர், கிளிநொச்சி பகுதியிலிருந்து பொருள்களை ஏற்றிவர வேண்டுமெனக் கூறி, வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி, அவ்வாகனத்தில் இருவரும் கிளிநொச்சி நோக்கி பயணித்துள்ளனர்.

பரந்தன் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது வீதியோரமாக வாகனத்தை நிறுத்துமாறு இருவரும் சாரதியிடம் கூறியுள்ளனர்.

வாகனம் நிறுத்தப்பட்ட பின்னர் அப்பகுதியில் உள்ள கடையொன்றில் இருவரும் குளிர்பானம் வாங்கி, சாரதிக்கு குடிப்பதற்கு வழங்கியுள்ளனர்.

குளிர்பானத்தை குடித்த சாரதி சிறிது நேரத்தில் மயக்கமடைந்துள்ளார்.

வீதியோரத்தில் நீண்ட நேரமாக நிறுத்தி வைக்கப்பட்ட வாகனத்தில்சாரதி அசைவின்றி மயக்க நிலையில் இருந்ததை அவதானித்த சிலர், சாரதியை உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட சாரதி சுயநினைவுக்கு வந்த பின்னரே, தனது நகைகள்கொள்ளையடிக்கப்பட்டதைஅறிந்து பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

# விற்பனை செய்யப்பட்ட வாடகைக் கார் சம்மாந்துறை பொலிஸாரிடம் சிக்கியது

(தில்சாத் பர்வீஸ்)

கொழும்பில் ஒருவரிடம் இருந்து 5 மாத காலத்திற்கு வாடகை அடிப்படையில் கார் ஒன்றினை மதுகம பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் பெற்றுள்ளார். காரை வாடகைக்கு பெற்றவர், அதனை சம்மாந்துறைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்துள்ளார்.

இந்நிலையில் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம்அதிரடியாக தேடுதல்நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸார் குறித்த காரை கைப்பற்றியுள்ளனர்.

காரின் உரிமையாளர் தமது கார் குறித்து வாடகைப் பெற்றவரிடம் விசாரித்த போது முரண்பாடான கருத்துக்களை முன் வைத்துள்ளார். அத்தோடு கார் களவு போய்விட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமது கார் சம்மாந்துறை பிரதேசத்தில் இருப்பதை அறிந்து கொண்ட உரிமையாளர், சம்மாந்துறை பொலிஸில் ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து பொலிஸார் காரை கைப்பற்றி உள்ளனர்.

பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் 2024.08 மாதம் குறித்த காரை 5 மாத வாடகைக்கு பெற்றவர், அக்காரை ஒரு கோடியே 20 லட்சத்திற்கு அதிகமான தொகைக்கு சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவருக்கு விற்பனைசெய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நடவடிக்கையில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான சார்ஜன் டபிள்யூ.ஏ. சரத், சார்ஜன் ஏ.பி.நபார் உள்ளிட்ட குழுவினர் இவ்விசாரணைகளில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பான, மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர்
Kalaikkathir

## மகிந்தவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேறவேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்திருப்பது பழிவாங்கும் செயல் என்று பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச குற்றஞ்சாட்டினார்.

பாதுகாப்பு மற்றும் அதன் நிமித்தம் வழங்கப்படும் உத்தியோகபூர்வ இல்லம் என்பன வரப்பிரசாதங்கள் அல்ல, அவை உரிமைகளாகும். எவ்வாறிருப்பினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த இல்லத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தயாராகவேஇருக்கிறார்என்றும்நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவித்ததாவது:

எம்மை வெளியேறுமாறு கூறினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வெளியேற நாம் தயாராகவே உள்ளோம். காரணம் இது எமது சொந்தகுடியிருப்புஅல்ல. முன்னாள்ஜனாதிபதி மஹிந்தராஜபக்சவும்இதேநிலைப்பாட்டிலேயே இருக்கின்றார். உத்தியோகபூர்வஇல்லம்என்பது முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பாதுகாப்பினை அடிப்படையாகக் கொண்டு அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ளவையாகும்.

எவ்வாறிருப்பினும் அந்த இல்லத்தை தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு யாருக்காவது விற்க வேண்டிய தேவை இருந்தால் அதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை அங்கிருந்து வெளியேற்ற நினைத்தால் அதனை நாம் எதிர்க்கப் போவதில்லை. ஆனால் அதனை உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் அறிவிக்கவேண்டும்.

அந்த உத்தியோகபூர்வ இல்லம் பலவந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்டதல்ல. அரசமைப்பு ரீதியாக கிடைக்கப்பெற்றதாகும். இதுஇலங்கைக்குமாத்திரம்வரையறுக்கப்பட்ட நியதியுமல்ல. உலகில் எந்தவொரு நாட்டிலும் இந்த நடைமுறையே காணப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு மாத்திரமின்றி சகல முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் இது பொருந்தும்.

முன்னாள்அரசதலைவர்கள்தற்போதைய ஆளும்தரப்பில் பழிவாங்கப்படுகின்றனரா இல்லையா என்பது ஜனாதிபதி அநுரவின் உரைகளிலும் செயற்பாடுகளிலும் மிகத் தெளிவாகத் தெரிகிறது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பு என்பது சிறப்புரிமை அல்ல. அது உரிமையாகும். இலங்கை வரலாற்றில் இதற்கு முன்னர் பல நிறைவேற்றதிகார ஜனாதிபதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதை இந்த ஆளும்தரப்புக்கு நினைவுபடுத்துகின்றோம்.

எனவே முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகும். எது எவ்வாறிருப்பினும்முன்னாள்ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாகஅறிவிக்கப்படும்பட்சத்தில் அந்த இல்லத்திலிருந்து வெளியேறுவதற்கு அவர் தயாராகவே இருக்கின்றார் - என்றார்.

## மண் சரிவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கண்டிமாவட்டத்தின் தொலுவ, உடுதும்பர, மாத்தளை மாவட்டத்தின் ரத்தோட்டை, வில்கமுவ, யடவத்தை மற்றும் உக்குவெல ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்காக 2ஆம் நிலை செம்மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பதுளை மாவட்டத்தின் பசறை, பதுளை, ஹாலிஎல, கண்டி மாவட்டத்தின் பாததும்பர, பன்வில, மெததும்பர, குருநாகல் மாவட்டத்தின்ரிதிகம, மாத்தளைமாவட்டத்தின் லக்கலபல்லேகம, அம்பன்கங்கைகோரளை, நாவுல, பல்லேபொல மற்றும் மாத்தளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முதலாம் நிலை மஞ்சல் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மகிந்தவை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''முன்னாள் ஜனாதிபதியை அவரது இல்லத்தில்இருந்துவெளியேற்றுவதற்குமக்கள் ஆளும்தரப்புக்கு ஆணை வழங்கவில்லை. ஜனாதிபதிகள் பொதுவாக முன்னாள் ஜனாதிபதிகளை தனிப்பட்ட முறையில் பழிவாங்க மாட்டார்கள்'' என்றார்.

''முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை அவரது இல்லத்தில் இருந்து வெளியேற்ற ஆளும்தரப்பு சதி செய்யும் அதேவேளையில், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக வாகனங்களை இறக்குமதி செய்ய ஆளும்தரப்பு திட்டமிட்டுள்ளது'' என்றும் அவர் குற்றம்சாட்டினார்.

முன்னாள்ஜனாதிபதிகளுக்குவழங்கப்பட்ட அனைத்துஉத்தியோகபூர்வஇல்லங்களையும் ஆளும்தரப்பு மீளப்பெறும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.

களுத்துறை கட்டுகுருந்தவில் நடந்த கூட்டம் ஒன்றில் கருத்து தெரிவித்த அவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் இல்லத்திற்கான வாடகை மாதத்திற்கு 4.6 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டங்களின்படி, முன்னாள் ஜனாதிபதிகள் வசிப்பதற்கான வீடு அல்லது அவர்களின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்கைப் பெறுவதற்கே உரிமை உண்டு.

இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதிகள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டும் அல்லது தாம் தங்கியிருக்கும் வீடுகளுக்கான வாடகையை அவர்களே செலுத்த வேண்டும்.

அவர்களுக்கான உதவி கொடுப்பனவை அரசாங்கம்30,000ரூபாயாகக்கட்டுப்படுத்தும், இது அவர்களின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்காகும்என்றும்ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை கொழும்பில் உள்ள ஜனாதிபதி மாளிகை, கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் அலரி மாளிகை தவிர அனைத்து அமைச்சர்களின் விடுதிகளும் ஹோட்டல் திட்டங்கள் அல்லது பிற பொருத்தமான பயன்பாடுகளுக்கு வழங்கப்படும்என்றும்ஜனாதிபதிதிசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## சீரற்ற.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாவட்டத்தில் இரு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. மேலும் 1623 குடும்பங்களைச் சேர்ந்த 5942 பேர் உறவினர்களது இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 26 குடும்பங்களைச் சேர்ந்த 91 நபர்கள் இரு தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில்175குடும்பங்களைச் சேர்ந்த 494 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு 58 குடும்பங்களைச் சேர்ந்த 156 பேர் உறவினர்களது இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பொலன்னறுவையில் 91 குடும்பங்களைச் சேர்ந்த 343 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பில் 131 குடும்பங்களைச் சேர்ந்த 440 பேர் பாதிக்கப்பட்டு;ளளனர்.

இங்கு மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு, 35 குடும்பங்களைச் சேர்ந்த 123 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பதுளையில் 67 குடும்பங்களைச் சேர்ந்த 239 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 17 வீடுகள் பகுதியளவில் சேதமமைந்துள்ளன. இம்மாவட்டத்தில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 77 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த 15ஆம் திகதி முதல் நேற்று வரை கிளிநொச்சி, அநுராதபுரம், குருணாகல், மொனராகலை, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம், அம்பாறை, திருகோணமலை, பொலன்னறுவை, மட்டக்களப்புமற்றும்பதுளைமாவட்டங்களில் 46 பிரதேச செயலகப்பிரிவுகளில், 5923 குடும்பங்களைச் சேர்ந்த 17 566 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகஅனர்த்தமுகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் இருவர் உயிரிழந்துள்ளனர். பதுளையில் ஒருவர் உயிரிழந்துள்ளதோடு, பொலன்னறுவையில் வெள்ளத்தில் அடித்துச் சென்ற ஒருவரும் உயிரிழந்துள்ளார். பொலன்னறுவை - வெலிகந்த, மதுகல ஆற்றில் படகொன்றில் சென்ற போது வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட தம்பதிகளில் மனைவி காப்பற்றப்பட்ட போதிலும், 35 வயதுடைய கணவன் உயிரிழந்துள்ளார்.

## தமது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுத்தப்படுவார்கள்என்றஎதிர்பார்ப்புடனேயே மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டுக்கும் அதிக பெரும்பான்மையை வழங்கினர்.

ஆனால் இன்றும் ராஜபக்ஷர்கள் மீது குற்றஞ்சுமத்துவதும், குறை கூறுவதும் மாத்திரமே இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

சட்டத்தைநடைமுறைப்படுத்தும்தைரியம் இந்த அரசாங்கத்துக்கு இல்லை. அரசாங்கம் அதன் இயலாமையை மறைப்பதற்காக மீண்டும் மக்கள் மத்தியில் சென்று பொய்களைக்கூறஆரம்பித்திருக்கிறது. ஆனால் பொய்களுக்கு ஆயுள் குறைவு என்பதை நாம் மீண்டும் நினைவுபடுத்துகின்றோம். உள்ளூராட்சி தேர்தல் கூட அறிவிக்கப்படாத நிலையில் எதற்காக பொது கூட்டங்கள் நடத்தப்படுகின்றன? அரசாங்கம் இவ்வாறு மழுப்பல் செயற்பாடுகளில் ஈடுபட்டாலும், வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் வரை அவற்றை நாம் நினைவுபடுத்திக் கொண்டிருப்போம்.

அன்று சீன அபிவிருத்தி திட்டங்களுக்கு கடும் எதிர்ப்பினை வெளியிட்ட இவர்கள், தற்போது கடந்த அரசாங்கங்கள் முன்னெடுத்த அந்ததிட்டங்களைஅவ்வாறேமுன்னெடுத்துச் செல்வதற்கு இணக்கம் தெரிவித்து விட்டு வந்திருக்கின்றன. இவ்வாறான காரணிகளால் தற்போது அரசாங்கம் அச்சமடைந்திருக்கிறது.

அதன் காரணமாகவே எந்தவொரு காரணமும் இன்றி பொது கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் தமக்கு தற்போதுள்ளசெல்லவாக்குதொடர்பில்மதிப்பீடு செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அமைதியான ஒழுக்கமான நாட்டை உருவாக்குவதாக அரசாங்கம் கூறினாலும், தினந்தோறும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகிக் கொண்டு தான் இருக்கின்றன.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியஅதிகாரிகளைமுச்சக்கரவண்டிகள் மற்றும் பேரூந்துகளிலுள்ள மேலதிக பாகங்களை அகற்றும் பணிகளில் ஈடுபடுத்தியுள்ளதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.

## யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கந்தர்மடம்பகுதியில்தேசியமக்கள்சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தை திறந்துவைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய அரசின் நிதி பங்களிப்புடன் திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மையமானது திருவள்ளுவர் கலாசாரம் மையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குறித்த நிகழ்வில் நானும் அதிதியாக கலந்துகொண்டவன் என்ற வகையில் பெயர் மாற்றம்தொடர்பில்திரைநீக்கத்தின்போதுதான் அவதானித்தேன்.

திருவள்ளுவர்கலாசாரமையம்எனப்பெயர் மாற்றியது குற்றமல்ல. யாழ்ப்பாணத்துக்கே உரித்தான பெயர்களான யாழ். கலாசார மையம் அல்லது யாழ். பண்பாட்டு மையம் என்ற பெயர் சூட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

பெயர் சூட்டும் நிகழ்வில் திருவள்ளுவர் கலாசார மையம் என காட்சிப்படுத்தப்பட்ட இலத்திரனியல் திரையில் தமிழுக்கு மூன்றாவது இடம் வழங்கப்பட்டமை கவலை தரும் விடயமாக இருந்தது. அதனைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன்.

தமிழ் மக்கள் வாழும் பகுதியில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். சிலவேளை தெரியாமல் சில தவறுகள் இடம்பெற்றிருக்கக்கூடும்.

குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் நான் இன்னும் கலந்துரையாடவில்லை. நிச்சயமாக அது தொடர்பில் கலந்துரையாடி இனிவரும் காலங்களில் தவறுகள் இடம்பெறாவண்ணம் செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

ஐக்கியதேசியகட்சியின்செயற்குழுகட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கதலைமையில் கூடியது. இதன்போது கட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. பலரும் பல்வேறு கருத்துக்களை தெரிவித்தனர். இறுதியில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு முகம்கொடுக்கும்வகையில்கட்சிஏற்பாடுகளை மாவட்ட மற்றும் தொகுதி மட்டத்தில் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு, மார்ச் மாதம் இறுதிக்குள் அந்த நடவடிக்கையை முடிவுக்குகொண்டுவரவும்தீர்மானிக்கப்பட்டது. அதேபோன்று எமது வேலைத்திட்டங்களை ஊடகங்கள் மூலம் பரப்புரை செய்யும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் கட்சிக்குள் இணைத்துக்கொண்டு ஐக்கியமாக செயற்பட வேண்டுவதற்குநடவடிக்கைஎடுக்கவேண்டும் எனஅதிகமானவர்கள்இதன்போதுகோரிக்கை விடுத்தனர். குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி எமது கொள்கையை உடைய கட்சி. அதனால் அவர்களுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதேபோன்று கடந்த தேர்தலில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்டவர்களையும் எங்களுடன் இணைத்துக்கொண்டு, பொதுக் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கே எதிர்பார்க்கிறோம் என்றார்.

## அடைக்கலநாதன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டது தொடர்பாக அனுராதபுரம் உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கு ஒன்றில் அவர் முன்னிலையாகத் தவறியதன் காரணமாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவில் நடைபெற்ற விழா ஒன்றில் பங்கேற்பதற்காக சென்றிருந்தமையால் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என அவர் தரப்பு வழக்கறிஞர் மன்றில் தெரிவித்திருந்தார்.

அத்துடன் நீதிமன்றத்தால் வழங்கப்படும் அடுத்த தவணைக்கான திகதியில் அவர் முன்னிலையாகத் தயாராக இருக்கிறார் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

இருப்பினும், அந்தக் காரணங்களை நிராகரித்தஉயர்நீதிமன்றநீதிபதி, நாடாளுமன்ற உறுப்பினரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிட்டார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் முன்பிணையில் விடுவிக்கக் கோரி மனுஷ நாணயக்கார தாக்கல் செய்த மனு நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, அவர்சார்பில்ஆஜரானஜனாதிபதிசட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிமன்றத்திற்கு இதனைத் தெரிவித்தார்.

தனது கட்சிக்காரர் நாளை (இன்று) குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சென்று வாக்குமூலம் அளிப்பதற்கு தயாராக உள்ளார் எனவும், பின்னர் வேறொரு நாளில் இந்த மனுவின் சமர்ப்பணங்களை உறுதிப்படுத்துவதற்காக அழைக்குமாறும் ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்திடம் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த மனுவின் சமர்ப்பணங்களை உறுதிப்படுத்துவதற்காக மனு ஜனவரி 22 விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளது.



# அனர்த்த முகாமைத்துவ குழு காரைதீவில் கண்காணிப்பில்

(சர்ஜுன் லாபீர்)

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம்மற்றும்வெள்ளநீரைகட்டுப்படுத்த அணைக்கட்டுகளை திறந்தமையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளி பிரதேசத்தில் நீர்மட்டம் உயர்ந்துசெல்வதனால்அதனைகண்காணிப்பு செய்வதற்காகவும் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகளை கண்காணிப்பு செய்வதற்காகவும் காரைதீவு பிரதேச செயலாளர்பொறியியலாளர்ஜிஅருணனின் வழிகாட்டுதல் மற்றும் பணிப்புரைக்கு அமைய அனர்த்த முகாமைத்துவ குழு ஒன்று கண்கானிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தினர்மற்றும்பொலிஸாருடன் சேர்ந்துஇவ்நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பொதுமக்கள் நலன் கருதி இவ்வாறான முன்னாயத்த செயற்பாடுகளை பிரதேச செயலகத்தினால்மேற்கொள்ளப்படிருப்பது பராட்டத்தக்க விடயமாகும்.





# மட்டு. – ஓட்டமாவடியில் அரிசிக்கடை சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு - வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - 3ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள அரிசிக்கடையொன்று நேற்று (திங்கட்கிழமை) சுற்றிவளைக்கப்பட்டது.

வாழைச்சேனை பொலிஸாருக்கும், நுகர்வோர் அதிகார சபையினருக்கும் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த அரிசிக் கடையில் இந்திய நாட்டு அரிசியை பொதி மாற்றி கலப்படம் செய்த தகவல் கிடைத்ததற்காகவே இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரிசிக் கடை உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# பிரிட்டிஷ் பெண்ணின் நிதி அட்டையை கொள்ளையடித்து பொருள் கொள்வனவு

## சந்தேகநபர் ஹற்றனில் கைது

(கிஷாந்தன்)



பிரிட்டிஷ் பெண்ணொருவரின் நிதி அட்டையைக் கொள்ளையடித்து. ஹற்றன் நகரிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்துள்ள சந்தேக நபர் ஹற்றன் பொலிஸாரால் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 22 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியிலிருந்து எல்ல நோக்கி சென்ற ரயிலில் பயணித்த பிரிட்டிஷ் பெண்ணின் நிதி அட்டையை, ஹற்றன் மற்றும் தலவாக்கலை ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் வைத்தே இவர் கொள்ளையடித்துள்ளார்.

பின்னர் ஹற்றன் நகருக்கு வந்துள்ளார். ஹற்றன் நகரில் தங்க நகை, தொலைபேசி, ஆடை உள்ளிட்டவற்றை கொள்வனவு செய்துள்ளார்.

தங்க நகையை ஹற்றனிலுள்ள தனியார் அடகு பிடிக்கும் நிலையமொன்றில் அடகு வைத்து 78 ஆயிரம் ரூபா பெற்றுள்ளார்.

தனது நிதி அட்டை களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் எல்ல சுற்றுலாப் பொலிஸாரிடம் குறித்த பெண் முறையிட்டுள்ளார். இதனையடுத்து அது தொடர்பில் ஹற்றன் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து விசாரணை வேட்டையில் இறங்கிய ஹற்றன் பொலிஸார், வாடகை வாகனமொன்றில் எல்ல நோக்கி பயணமாக தயாராகிக்கொண்டிருந்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர். களவாடிய நிதி அட்டையில் இருந்து வாங்கிய பொருள்களையும் மீட்டனர்.

பிரிட்டிஷ் பெண்ணை ஹற்றன் வரவழைத்து, நிதி அட்டையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தனர். குறித்த நபர் கடைகளில் வாங்கிய பொருள்கள் மீள வழங்கப்பட்டு அதற்குரிய பணமும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# சரத் என் சில்வா பிரதம நீதியரசராக பதவியேற்கும் படத்தை தலைகீழாக பிரசுரித்த துணிச்சல் மிகு ஊடகர் விக்டர் ஐவன்

(சாலிய பீரிஸ் புகழஞ்சலி)

சரத் என் சில்வா பிரதம நீதியரசராக பதவியேற்கும் படத்தை ராவயவில் விக்டர் ஐவன் தலைகீழாக பிரசுரித்து இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரத்தின் மரணம் என குறிப்பிட்டிருந்ததை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ் தனது ருவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

பத்திரிகையாளர் விக்டர் ஐவன் அச்சமற்ற துணிச்சலான ஒருமனிதர். அவர் பலசெல்வாக்குமிகுந்த நபர்களை துணிச்சலுடன் எதிர்கொண்டார் அவர்களில் ஒருவர் இலங்கையின் சட்டமா அதிபராக பிரதம நீதியரசராக பதவி வகித்த சரத் என். சில்வா.



රාවය
අධිකරණ නිදහසේ මළගම

சரத்என்சில்வா பிரதமநீதியரசராக பதவியேற்றதை ராவயவின் தலைப்புச்செய்தியாக வெளியிட்டிருந்தது- இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரத்தின் மரணம் எனகுறிப்பிட்டிருந்தது.

சரத் என் சில்வா பதவியேற்கும் படத்தை தலைகீழாக வெளியிட்டு இலங்கையின் நீதித்துறையின் மரணம் என ராவய தலைப்பிட்டிருந்தது.

அடுத்த பத்து வருடங்களில் விக்டர் ஐவன் சரத்சில்வாவுடன் பல சந்தர்ப்பங்களில் மோதினார்.

தனது பதவிக்காலத்தில் சரத் என்சில்வா பலருக்கு



எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டை சுமத்திய போதிலும் விக்டர் ஐவனிற்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு எதனையும் சுமத்தவில்லை.

இவ்வாறான நபர்களையே மியன்மாரின் ஆங் சாங் சூ கி தனது வாழ்க்கை வரலாற்று நூலில் அச்சமற்றவர்கள் என குறிப்பிடுகின்றார்.

'தனிநபர் அல்லது தேசத்தின் பெரும்கொடை என்னவென்றால் அச்சமற்றவராக விளங்குதல், அது உடல் ரீதியில் துணிச்சல் கொண்டவராக விளங்குவது மாத்திரமில்லை, மனதிலும் அச்சமற்றவராகயிருத்தல்' - என்றுள்ளது.

# கிளிநொச்சி பஸ் நிலையத்திலிருந்து வெளியேறும் மலக் கழிவை தடுக்கத் தவறின் சட்ட நடவடிக்கை

## கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்திலிருந்து வெளியேறும் மலக்கழிவை உடனடியாக 24 மணித்தியாலத்துக்குள் அகற்றி சுகாதாரத்தை பேணத் தவறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி இ.கஜேந்திரா தெரிவித்துள்ளார்.

வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் கீழ் செயற்படும் கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்தில் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மலக்கழிவு வெளியேறுகின்ற நிலையில் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாதிருந்தது.

இதனால் பொது மக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்த நிலையில் புதன்கிழமை உரிய இடத்திற்கு விஜயம் செய்த கரைச்சி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் ஆகியோர் நிலைமைகளை நேரில் அவதானித்து உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.01.2025இல் வெளியிடப்பெற்றது